5-6-1991


# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ்: 9 07-06-1991 (யூன். 07 — யூன். 21) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு· விலை ரூபா 3-50


## புதிய சுரூபம்

மே 12—13ஆம் திகதிகளில் பண்டத்தரிபபு பத்திமாபதியில் பத்திமா அன்னையின் விழா நடைபெற்றபோது அங்கு சென்ற யாழ் ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் போர்த்துக்கல் பத்திமாபதியிலிருந்து அனுப்பப்பட்ட பத்தமா அன்லையின் சுரூபத்தை ஆலயத்திற்கு கையளித்தார்.

### 9வது சுற்றுமடல் "நூற்றாண்டு நினைவு" — "CENTESIMUS ANNUS"

# திருத்தந்தையின் சமூகச் சுற்றுமடல்

# அநீதியான பங்கீட்டுக்கு எதிரானது

திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரின் "ரேறும் நோவாறும்" என்ற திருமுகத்தின் நூற்றாண்டை நினைவுகூர திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் புதிய சுற்றுமடல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன் 90 ஆவது ஆண்டில் 1981 இல் "லபோறெம் எக்சேஜென்ஸ்" என்னும் சுற்றுமடலும், 1987 இல் "சொலிசிரூடோ றேயி சோசியாலிஸ்" என்னும் சுற்றுமடலும் திருத்தந்தையின் முதல் இரு சமூகச் சுற்றுமடல்களாகும்.

சென்ற 2ஆம் திகதி திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் மூன்றாவது சமூகச்சுற்றுமடலும், அவரது காலத்தில் வெளிவரும் 9 வது சுற்றுமடலுமான 'சென்ரெஸ்ஸீமுஸ் அன்னுஸ்' வெளியிடப்பட்டது. 1892 மே 15ல் திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் வெளியிட்ட 'ரேறும் நோவாறும்'' என்னும் சமூகச் சுற்றுமடலின் நூற்றாண்டை நினைவு கூருமுகமாகவும், தற்கால தேவைகளுக்கு ஏற்ற கருத்துரைகளை வழங்கவும், மூன்றாவது ஆயிரமாண்டை நோக்கித் திருச்சபையை வழிநடத்திச் செல்லவும் 114 பக்கங்களைக் கொண்ட இப்புதிய சுற்றுமடல் வெளியிடப்பட்டுள்ளது.

சென்ற 15 ஆம் திகதி தமது புதிய சுற்றுமடல் பற்றி உரையாற்றிய திருத்தந்தை தாம் தமது சுற்றுமடலில் மூன்று அம்சங்களைப்பற்றி குறிப்பிட்டுள்ளதாக கூறினார். ஒன்று: வளர்ச்சியடைந்த — வளர்முக நாடுகளுக்கிடையே மூலவளங்கள் அநீதியான முறையில் பங்கிடப்பட்டுள்ளமை, இரண்டு: ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மூலவளங்கள் அநீதியான முறையில் பகிரப்பட்டுள்ள தன்மை, மூன்று: தொழில்நுட்பத்துக்கு முதலிடம் கொடுத்து சூழல் மாசடைய காரணமாயிருத்தல்.

## தற்போது போலந்தில் திருத்தந்தை

தனது தாய்நாடான போலாந்தில் கொம்யூனிசம் வீழ்ச்சி அடைந்த பின் முதல் தடவையாக திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் இவ்வாரம் தமது விஜயத்தை மேற்கொண்டுள்ளார். கிழக்கு ஐரோப்பாவில் அரசியல் மாற்றங்களை பெரிதும் வரவேற்றுள்ள திருத்தந்தை போலந்து ஜனாதிபதி லேக் வலேன்சாவைச் சந்தித்ததுடன் ஏராளமான மக்கள் மத்தியில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இனப்பிரச்சினையால் பிளவுபட்டுள்ள கத்தோலிக்கரின் பிரிவினைகளையும் திருத்தந்தை வெகுவாகக் கண்டித்துள்ளார்.


## கொலைமுயற்சியிலிருந்து காத்ததற்காக திருத்தந்தை பத்திமாபதிக்கு யாத்திரை

பத்து லட்சம் யாத்திரிகர்கள் மத்தியில் திருத்தந்தை பத்திமாபதியில் சென்ற 13 ஆம் திகதி நன்றித் திருப்பலி நிறைவேற்றினார். 1981 மே 13 இல் வத்திக்கானில் இராயப்பர் சதுக்கத்தில் திருத்தந்



## யாழ். மாகாண அ. ம. தி. களுக்கு ஒரு புதிய தலைவர்

யாழ். மாகாணத்து அமலமரித் தியாகிகளின் புதிய தலைவராக அருள். திரு. P P.



இவ்வாரம் தமது விஜயத்தை மேற்கொண்டுள்ளார். கிழக்கு ஐரோப்பாவில் அரசியல் மாற்றங்களை பெரிதும் வரவேற் பிரச்சினையால் பிளவுபட்டுள்ள கத்தோலிக்கரின் பிரிவினைகளையும் திருத்தந்தை வெகுவாகக் கண்டித்துள்ளார்.

# கொலைமுயற்சியிலிருந்து காத்ததற்காக திருத்தந்தை பத்திமாபதிக்கு யாத்திரை



பத்து லட்சம் யாத்திரிகர்கள் மத்தியில் திருத்தந்தை பத்திமாபதியில் சென்ற 13 ஆம் திகதி நன்றித் திருப்பலி நிறைவேற்றினார். 1981 மே 13 இல் வத்திக்கானில் இராயப்பர் சதுக்கத்தில் திருத்தந்தையைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் இருந்து தம்மைக் காப்பாற்றிய இறைவனுக்கும், பத்திமா அன்னைக்கும் நன்றி கூற திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் தமது 50 வது வெளிநாட்டுப் பயணத்தை போர்த்துக்கல்லுக்கு மேற்கொண்டார். 1982 இல் பத்திமாபதிக்கு தனது முதல் விஜயத்தை மேற்கொண்ட திருத்தந்தை தனக்குக் கொடுக்கப்பட்ட பத்து ஆண்டு வாழ்வுக்காகவும் நன்றி கூற மே 10 — 13 இல் 2வது விஜயத்தை மேற்கொண்டார்.

ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் மறைபோதகப் பணியில் தீவிரமாக ஈடுபட்ட போத்துக்கல் நாட்டில் 1917 இல் மரியன்னை முத்திப்பேறு பெற்ற பிரான்சிஸ்கோ, யசிந்தா மற்றும் 84 வயதான அருட்சகோதரி லூசியா ஆகிய மூவருக்கும் சிறுவயதில் காட்சி தந்ததால் பிரபல்யமடைந்த யாத்திரைத்தலத்துக்கு சென்று திருத்தந்தை தம் உயிர்காத்த அன்னைக்கு நன்றி தெரிவித்தார்.

## யாழ். மாகாண அ. ம. தி. களுக்கு ஒரு புதிய தலைவர்



யாழ். மாகாணத்து அமல மரித் தியாகிகளின் புதிய தலைவராக அருள் திரு. P P. பிலிப்பு பர்னாந்து அ. ம. தி. அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ் மாகாணம் சிறீலங்கா மாகாணத்திலிருந்து பிரிந்து தனி மாகாணமாக இயங்கத் தொடங்கியதிலிருந்து இவர் இரண்டாவது தலைவராவர். இவருக்கு முன்பு அருள்திரு. லூயிஸ் பொன்னையா அ. ம. தி. மாகாணத் தலைவராக இருந்தது தெரிந்ததே.

அருள்திரு. பிலிப் அவர்கள் 55 வயதானவர். யாழ். பாசையூரை பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு, மன்னார் மறைமாவட்டத்திலும், இந்தியாவின் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் மறைப்பணி ஆற்றிய அனுபவம் கொண்டவர். அமதிகளின் யாழ். மாகாண நிர்வாகத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக ஆலோசகராகவும், கடந்த மூன்று வருடங்களாக கொழும்புத்துறை அமல உற்பவத்தின் அதிபராகவும் கடமை புரிந்துள்ளார். இவர் துறவியர், குருமாணவருக்கான ஆன்மீக வழிகாட்டலில் நீண்ட கால ஈடுபாடு கொண்டுள்ளார்.

இவரில் மிளிரும் எளிமையான போக்கும், கனிவான பேச்சும், ஆழ்ந்த இறையுணர்வும், புரிந்துணர்வு கொண்ட உறவாடலும் மாகாணத்தில் இவரது செல்வாக்கை அதிகரிக்க காரணமாயின.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### குழப்பம்

சமய உட்பிரிவுகள் பெருகுவதற்கும், பாரம்பரிய கத்தோலிக்க சமூகங்களில் அவை ஊடுருவுவதற்கும் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய முயறசிகளைப் பற்றிக் கருதினால்மார் சிந்தித்தனர். புதிய இறையியல் கருத்துக்களால் குழப்பம் அடைந்துள்ள கத்தோலிக்கரே பெரும்பாலும் இவ்வலையில் சிக்குகின்றனர் என்ற கருத்தையும், இக்கருதினால்கள் முன்வைத்துள்ளனர். இக்கருத்தை முன்வைத்த கருதினால் யோசப் ரொம்கோ ''ஆசிய இறையியலாளர்களே மக்களைக் குழப்பும் இறையியல் கருத்துக்களை அதிகமாகப் பரப்பி வருகின்றனர்'' என்றும் கூறியுள்ளார். மேற்படி கருத்தை முன்வைத்த கருதினால் அவர்கள் சர்வதேச மறைபரப்புப் பணிக்குப் பொறுப்பானவர் என்பதும், சென்ற ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்து, கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் நம் நாட்டின் பெரும்பான்மையான குருக்களைச் சந்தித்து, அங்கு அவர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபற்றினவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட கருத்து ஆசிய இறையியலாளர்களைத் திகைக்கவைத்தால் மட்டும் போதாது. அவர்களைச் சிந்திக்கவும் தூண்டவேண்டும்.

சமய உட்பூசல்கள் பெருகுவதற்குப் பல காரணிகள் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. நாம் இப் பக்கத்தில் பிரசுரிக்கும் ஆக்கமானது பிற கருதினால்மார் முன்வைத்த பிற கருத்துக்களையும் உங்களுக்குத் தருகின்றது.

நமது மக்களுக்குப் பல விடயங்களை நாங்கள் கற்பிக்க வேண்டும் என்ற ஆவலிலே, சிலர் நடைமுறையிலுள்ள நல்ல பண்புகளைத் தூக்கி எறிந்துவிட்டு புதிய கருத்துக்களை முன்வைக்க முற்படுகின்றனர். இதனால் மக்கள் வேரறுந்த மரங்களாக, நிலைகுலைந்துபோகக் காரணமாயிருக்கின்றனர். அடிப்படையில் ஆட்டம்கண்டு தவிக்கச் செய்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் நடைமுறையிலுள்ள நற்பண்புகளைப் பற்றிப் பேச மறந்துபோவதால், புதிய சிந்தனைகளைப்பற்றிக் கேள்விப்படுபவர்கள், அதன் புதுமையிலே தம்மையே மெய் மறந்து, நடைமுறையில் செயற்பட்டுவந்த நற்பண்புள்ள செயல்களைக் கைவிட்டு விடுகின்றனர்.

புதிய கருத்துக்களை முன்வைக்கும் இறையியலாளர்கள் அக் கருத்துக்களை பரப்புவதற்குப் பதிலாக தங்களையே முன்வைக்க முனைகின்றனர். சுய விளம்பரத்தைத்தேடுகின்றனர். இதனால் அவர்கள் மெய் மறந்த நிலையில் தாம் கூறவந்த கருத்தை அளவுக்கதிகமாக பெரிதுபடுத்தி, அவை பலன் கொடுக்காதுபோகச் செய்கின்றனர்.

# சமய உட்பிரிவுகள் பெருகுவானேன்

ஏப்ரல் 5 ஆம் திகதி கருதினால்கள் வத்திக்கானில் ஒன்று கூடி கத்தோலிக்க திருச்சபையைப் பாதிக்கின்ற ''அடிப்படைவாதக் குழுக்கள் பரவாதிருக்க மறைபரப்புப் பணி முன்னேற்றப்பட வேண்டும்'' என்ற கருத்தை ஆராய்ந்தனர். அக்கருத்தரங்குபற்றிய மேலதிக விபரங்களை இங்கே தருகிறோம்.

அண்மையில் இவ்விடயம் பற்றி ஆராய வத்திக்கானில் கூடியிருந்த கருதினால்மார் உலகெங்கிலும்சமய உட்பிரிவுக் குழுக்கள் பெருகிவருவதற்கும், பாரம்பரிய கத்தோலிக்க சமூகங்களில் அவை ஊடுருவியமைக்கும், வறுமை முதல் பசாசுவரை பற்பல காரணங்களை எடுத்துக்காட்டினர். கலந்துரையாடலின்போது இத் திருச்சபைத் தலைவர்கள் இக்குழுக்களின் வெற்றிக்குக் காரணம் ஆன்மீக வறுமை, கத்தோலிக்க மறையினுள் இருக்கும் பல வீனங்கள், விரைவான சமூக மாற்றம் அந்நியப்படுத்தல் ஆகியவற்றால் ஏற்பட்ட பதற்றநிலை போன்ற ஏதுக்களால் அவை தூண்டப்படுவது எனக் கருத்துத் தெரிவித்தனர். ''சம்பந்தப்பட்ட மக்களுக்குத் தெரியாமலிருந்தபோதிலும் இக் குழுக்கள் பெருகியதற்கு விளக்கம் கூறுகையில் பசாசின் செயற்பாட்டையும் விட்டு விடலாகாது என ஏழு பேச்சாளர்களுள் ஒருவரான கருதினால் அரின்ஸே கூறினார்.

சமய உட்பிரிவுக் குழுக்கள் கத்தோலிக்க மக்களை மதம் மாற்றும் முயற்சியில் வெற்றி பெற்றுவருவதுபற்றியும், இதனைத்தடுத்து நிறுத்த கையாளக்கூடிய வழிவகைகள்பற்றியும் ஆராயும்பொருட்டு கடந்த ஏட்ரல் 5 ஆம் திகதி கருதினால்மார் ஒன்று கூடினர்.

பேச்சாளர்கள் திருச்சபையில் காணப்படும் சில குறைபாடுகளும் இக்குழுக்கள் பெருகுவதற்குத் துணை புரிகின்றன எனக் கூறினர். கருத்துவேறுபாடுள்ள இறையியலாளர்கள் விசுவாசத்தைப்பற்றி ஏற்படுத்திய குழப்பமும், தனிநபருக்குப் போதிய கவனம் அளிக்காதக் குழப்பம் சமயக் குழுக்கள் பெருகுவதற்கு வழியேற்படுத்தும் என்றும் கூறினார்.

கருதினால் அரின்ஸே இந்தச் சமயக் குழுக்கள் திருச்சபைக்கு ஒரு அச்சுறுத்தலாக அல்ல, ஒரு அறைகூவலாக கருதப்படவேண்டுமென்றார். இதுவரை இனங்காணப்படாத, அல்லது திருச்சபையும் ஏனைய சமய நிறுவனங்களும் கண்டுணராத அல்லது எதிர் கொள்ளத் தெரியாத ஆன்மீக தேவைகள் உண்டு என்பதை இக்குழுக்களின் பெருக்கம் சுட்டிக்காட்டுகிறது என்றார் அவர். இக் குழுக்களை அவர் நான்கு வகையாகப் பிரித்தார். 1. வேதாகம அடிப்படையிலான கிறிஸ்தவ கிளைக் குழுக்கள். 2. இந்துமதம், பௌத்தமதம் போன்ற பாரம்பரிய மதங்களிலிருந்து உருவானவை. 3. சமயத்தைத் திரித்து மாந்திரிகம் பேய் வணக்கம் போன்ற சடங்குகளோடு கூடிய பூர்வீக முறைகளை ஆதரிப்பவை 4. கடவுள் நம்பிக்கை உடையவை. ஆபிரிக்காவில் சமயத்தின் மூலம் மாந்திரிகம், தோல்வி, துன்பம், நோய், மரணம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு வேண்டும் மக்களை இக்குழுக்கள் கவருகின்றன. காலனித்துவ ஆட்சியின்பின் ஏற்பட்ட அரசியல், கலாசார, சமூக நெருக்கடிகளும் இவை வளர்வதற்குத் துணைபுரிந்துள்ளன. திருச சபையின் பலவீனத்தைப் பயன்படுத்தி, கத்தோலிக்கர் சமயக் கோட்பாடுகளில் நனகு பயிற்றப்படாதிருக்கும் இடங்களில், இக்குழுக்கள் நிலைமையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி வலியதான வேதாகம அடிப்படைப் போதனையைச்

மார் இக்குழுக்கள் தமது கருத்துக்களை விதைப்பதற்கு ஏழை மக்கள் தான் நல்ல வளமான நிலம் என்பதை ஒப்புக்கொண்டனர். கத்தோலிக்கர் பெரும்பாலாக வாழும் இடங்களில் கத்தோலிக்க சமயத்தின்மீது நேரடியான தாக்குதலும் பெரும்பாலும் நடைபெறுகின்றது. பிலிப்பைன், லத்தீன் அமெரிக்கா போன்ற இடங்கள் இதற்கு உதாரணம்.

வேதாகம அடிப்படைக் குழுக்களின் கவர்ச்சிக்கு இலகுவில் இலக்காகக் கூடியவர்கள் சமுதாயத்தின் கீழ்மட்ட மக்களாவர். அவர்களுக்கு எதிர்காலத்தில் பொருளாதாரவசதி கிடைக்குமென வாக்களிக்கப்படுவதுதான் பெரும்பாலும் இதற்குக் காரணம். சில குழுக்கள் வெளிப்படையாகவே மதம் மாற்றப்படும் ஒவ்வொருவருக்காகவும் அங்கத்தவர்களுக்கு பணம் கொடுக்கின்றன. அங்கத்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கின்றன. நற்செய்தி பெறாத கத்தோலிக்கரை மதம் மாற்றுவதே இவர்களது முக்கிய நோக்கம். இவ்வாறு பிலிப்பைன் நாட்டைச் சேர்ந்த கருதினால் றிக்கார்டோ விதால் குறிப்பிட்டார்.

லத்தீன் அமெரிக்காவில் பெருந்தொகையான சமய உட்பிரிவுகள் தோன்றியுள்ளதாக நிக்கரகுவாவைச் சேர்ந்த கருதினால் மிகல் ஒபாண்டோ பிராவோ கூறினார். லத்தீன் அமெரிக்க ஆயர்கள் கணக்கீட்டின்படி 1974ல் அப்பிரதேசத்தில் கத்தோலிக்கரல்லாதார் தொகை 8 மில்லியன். 1985ல் இது 30 மில்லியனாக உயர்ந்தது. இது ஒரு தற்காலிகமான நிகழ்ச்சி அல்ல. திருச்

கற்பிக்க வேண்டும் என்ற ஆவலிலே, சிலர் நடைமுறையிலுள்ள நல்ல பண்புகளைத் தூக்கி எறிந்து விட்டு புதிய கருத்துக்களை முன்வைக்க முற்படுகின்றனர். இதனால் மக்கள் வேரறுந்த மரங்களாக, நிலைகுலைந்து போகக் காரணமாயிருக்கின்றனர். அடிப்படையில் ஆட்டம்கண்டு தவிக்கச் செய்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் நடைமுறையிலுள்ள நற்பண்புகளைப் பற்றிப் பேச மறந்துபோவதால், புதிய சிந்தனைகளைப்பற்றிக் கேள்விப்படுபவர்கள், அதன் புதுமையிலே தம்மையே மெய் மறந்து, நடைமுறையில் செயற்பட்டுவந்த நற்பண்புள்ள செயல்களைக் கைவிட்டு விடுகின்றனர்.

புதிய கருத்துக்களை முன்வைக்கும் இறையியலாளர்கள் அக் கருத்துக்களை பரப்புவதற்குப் பதிலாக தங்களையே முன்வைக்க முனைகின்றனர். சுய விளம்பரத்தைத்தேடுகின்றனர். இதனால் அவர்கள் மெய் மறந்த நிலையில் தாம் கூறவந்த கருத்தை அளவுக்கதிகமாக பெரிதுபடுத்தி, அவை பலன் கொடுக்காதுபோகச் செய்கின்றனர்.

இக்கருத்துக்களினால் கவரப்படுகின்ற சில சாதாரண மக்கள், தாமும் இவற்றைக் கொண்டு பெருமை தேட விழைகின்றனர். இக்கருத்துக்கள் தம்முள் சிறந்தவையாகவும், பார்வைக்கு அழகுள்ளவையாகவும், சிந்தனைக்கு விருந்தாகவும் அமைந்துவிடுவதால் இவற்றால் பலரை இலகுவாகக் கவர்ந்துவிட முடிகிறது.

இவ்வாறு பெருமை தேடுவதே நோக்காக மாறுகின்ற வேளையில் அடிப்படை உண்மைகளையும், நெறிமுறைகளையும், மரபுகளையும் மறுதலிக்கும் அளவுக்கு அவர்கள் மனங்கள் கடினமடைந்து விடுகின்றன.

இதனால் அவர்கள் செயலுருக்கொடுக்க முடியாததும் நடைமுறைச் சாத்தியமற்றதுமான பல புதிய வழிமுறைகளைப் பற்றிப்பிடித்துக்கொண்டு அவற்றை முதன்மைப் படுத்தவும், பரப்பவும் முற்படுகின்றனர்.

இத்தகைய சிந்தனைகள் பேச்சளவில் சிறந்தவையே. ஆனால் நடைமுறைக்கு கொண்டுவரும் வேளையில் பல இடர்களை உண்டுபண்ணுகின்றன. ஆழமான கருத்துக்களை மேலோட்டமாகக் கூறிவிட்டு, மேலெழுந்தவாரியாக அவற்றை நடைமுறைப் படுத்தத் தூண்டும்போது பாமர மக்கள் குழப்பம் அடைவது இயற்கையே.

இடறல் யாரால் வருகிறதோ அவனுக்கு ஐயோகேடு.

சாளர்களுள் ஒருவரான கருதினால் அரின்ஸே கூறினார்.

சமய உட்பிரிவுக் குழுக்கள் கத்தோலிக்க மக்களை மதம் மாற்றும் முயற்சியில் வெற்றி பெற்றுவருவதுபற்றியும், இதனைத்தடுத்து நிறுத்த கையாளக்கூடிய வழிவகைகள்பற்றியும் ஆராயும்பொருட்டு கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி கருதினால் மார் ஒன்று கூடினர்.

பேச்சாளர்கள் திருச்சபையில் காணப்படும் சில குறைபாடுகளும் இக்குழுக்கள் பெருகுவதற்குத் துணை புரிகின்றன எனக் கூறினர். கருத்துவேறுபாடுள்ள இறையியலாளர்கள் விசுவாசத்தைப்பற்றி ஏற்படுத்திய குழப்பமும், தனிநபருக்குப் போதிய கவனம் அளிக்காத நிறுவன அமைப்புக்களும் இதற்கு உதாரணமாகக் கூறப்பட்டன.

நற்செய்திப்பணிப் பேராயத்தின் தலைவரான கருதினால் ஜோசவ் ரொம்கோ சர்வமத உரையாடலை நோக்காகக் கொண்டு இந்திய இறையியலாளர்கள் "ஏற்றுக்கொள்ளமுடியாத, அழிவுக்கேதுவான கொள்கைகளை" உருவாக்கியதாகக் குறிப்பிட்டு இக்கொள்கைகளின்படி நற்செய்திப்பணியானது உரையாடல், பண்பாட்டுமயமாக்கல், விடுதலை ஆகியவற்றிலேயே அடங்கியிருக்குமென்றும், இதன் விளைவாக எல்லா மதங்களும் சமமானவை, மீட்பு என்னும் மறைபொருள் எல்லா மதங்களின் மூலமும் நிறைவேற்றப்படலாம் என்ற எண்ணப்பதிவு உண்டாகலாம் என்றும், இந்

களை ஆதரிப்பவை 4. கடவுள் நம்பிக்கை உடையவை. ஆபிரிக்காவில் சமயத்தின் மூலம் மாந்திரிகம், தோல்வி, துன்பம், நோய், மரணம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு வேண்டும் மக்களை இக்குழுக்கள் கவருகின்றன. காலனித்துவ ஆட்சியின்பின் ஏற்பட்ட அரசியல், கலாசார, சமூக நெருக்கடிகளும் இவை வளர்வதற்குத் துணைபுரிந்துள்ளன. திருச்சபையின் பலவீனத்தைப் பயன்படுத்தி, கத்தோலிக்கர் சமயக் கோட்பாடுகளில் நன்கு பயிற்றப்படாதிருக்கும் இடங்களில், இக்குழுக்கள் நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வலியதான வேதாகம அடிப்படைப் போதனையைச் செய்கின்றன. பங்குகள் மிகப் பெரிதாகவும், ஆட்களோடு தொடர்பற்றனவாகவும் இருக்கும் இடங்களில் அவர்கள் சிறு குழுக்களை அமைக்கின்றார்கள். தனிமனிதர்கள் இக்குழுக்களில் தங்கள் தகுதியை ஏற்று தாம் மதிக்கப்படுவதாகவும், அன்புகூரப்படுபங்களிப்புத் தரப்படுவதாகவும் உணர்கின்றனர். இதற்கு எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது கத்தோலிக்கருக்கு ஆழ்ந்த சமய அனுபவம் அளிக்கப்படவேண்டியது அவசியம். அறிவுறுத்தியான தகவல் அளிப்பது மட்டும் போதாது. இவ்வாறு நைஜீரிய நாட்டவரான கருதினால் அரின்ஸே கூறினார்.

ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகிய இடங்களைச் சேர்ந்த கருதினால்

கின்றன். நற்செய்தி பெறாத கத்தோலிக்கரை மதம் மாற்றுவதே இவர்களது முக்கிய நோக்கம். இவ்வாறு பிலிப்பைன் நாட்டைச் சேர்ந்த கருதினால் ரிக்கார்டோ விதால் குறிப்பிட்டார்.

லத்தீன் அமெரிக்காவில் பெருந்தொகையான சமய உட்பிரிவுகள் தோன்றியுள்ளதாக நிக்கரகுவாவைச் சேர்ந்த கருதினால் மிகெல் ஒபாண்டோ பிராவோ கூறினார். லத்தீன் அமெரிக்க ஆயர்கள் கணக்கீட்டின்படி 1974ல் அப்பிரதேசத்தில் கத்தோலிக்கரல்லாதார் தொகை 8 மில்லியன். 1985ல் இது 30 மில்லியனாக உயர்ந்தது. இது ஒரு தற்காலிகமான நிகழ்ச்சி அல்ல. திருச்சபையின் சமூக நிலைப்பாடு பற்றி அதிருப்திகொண்ட சில லத்தீன் அமெரிக்க அரசுகள் இக்குழுக்களுக்கு முழு ஆதரவளித்து அவை வளர்வதற்குத் துணைபுரிகின்றன. பல குழுக்கள் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வந்தவை.

குறுகிய சமூகங்களான இக்குழுக்களில் மிகப் பெரிதான கத்தோலிக்க கழகங்களை விடக்கூடிய சகோதரத்துவ உறவு கிடைக்கிறது என மெக்ஸிகோ நகரக கருதினால் ஏர்னெண்டோ கொறிபியோ அகுமடா கூறினார். ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பிரதி வருடமும் 60,000 ஸ்பானிய கத்தோலிக்கர் இக் குழுக்களிலோ புரொட்டஸ்தாந்து சபைகளிலோ சேர்வதாக அவர் கூறினார்.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# பாமரமக்களின் மத்தியில் ஒரு புனிதர்

யாழ்குடா நாட்டில், ஏழாலை என்னும் கிராமத்தில் ஆலயம் அமைத்து சகல விதமான ஆபத்துக்களிலும் தன்னையும் காத்து, தன் ஆலயத்தையும் காத்து, தன்னை நம்பி வரும் அடியார்களையும் காத்து நிற்கும் புனித இசிதோரின் பெருவிழா மே மாதம் கடைசி ஞாயிறில் இவ்வாலயத்தில் கொண்டாடப்பட்டது.

ஸ்பெயின் நாட்டில் மாட்ரிட் நகரத்தில் பிறந்த இவர் ஒரு சாதாரண விவசாயி. எவ்வித கஷ்டநிலையிலும் இறைவனுக்கும் தன் எஜமானனுக்கும் பிரமாணிக்கமுள்ள ஊழியனாக நடந்து வந்தார். திருமணம் செய்து பிள்ளைகளுடன் இருந்த போதும் தேவ விசுவாசத்தில் சற்றும் மனம் தளராதவராக இருந்தார். எத்தனையோ துன்பங்கள் இவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட்ட போதும் அவற்றை இறைவனுக்குச் சமர்ப்பித்து இறையன்பில் நெருங்கியிருந்தார்கள். இதன் பயனாக இறைவன் இக்குடும்பத்தை ஆசீர்வதித்தார். அவர்களுக்குப் பல கொடைகளையும் கொடுத்தார். இறையன்பில் திளைத்திருந்த புனித இசிதோர் பல புதுமைகளைச் செய்தார். இறந்துபோன தன் எஜமானனின் பிள்ளையொன்றை உயிர் பெறச் செய்தார். இவரின் விசுவாசத்தின் நிமித்தமாக இறைவன் தன் தூதுவனையே அனுப்பி வயலை உழச் செய்தார்.

இவர் இறந்த பின்னும் பல புதுமைகள் நடந்தன. ஒரு முறை நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட பொழுது இவரின் உடலை எடுத்து நகரைச் சுற்றி வந்தவுடன் மழை பெய்தது. இவரை அடக்கம் செய்த இடத்தில் வழிபட்ட மக்களின் துயரங்களும், துன்பங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கின. இவரை நம்பி அண்டி வந்து துன்பங்கள் தீர வழிபட்ட அடியவர்களின் துன்பங்களும், துயரங்களும் தீர்க்கப்பட்டன. இதன் பெறுபேறாக இவர் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். விவசாயிகளினதும், கமக்காரர்களினதும் பாதுகாவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்று இவர் ஏழாலையில் விவசாயிகளுக்கும், கமக்காரர்களுக்கும் உதவியாக இருந்து அவர்களின் துன்ப துயரங்களில் ஆதரவாக இருந்து வருகின்றார்.

யாழ்குடா நாட்டில் ஏழாலையில் மட்டுமே ஆலயம் கொண்டிருக்கும் இப்புனிதரின் திருவிழா சிறப்பாக நடக்க இறைவன் திருவருள் காட்டினார்.

செ. மரியநாதன்
62⁵/10, ஓ. எல். ஆர். லேன்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

# தேசிய நடுநிலையத்தின் பணி

(யூக்கன் செய்தி)

பெங்களூரிலுள்ள வேதாகம, மறைக்கல்வி, திருவழிபாட்டு நடுநிலையம் கடந்த 14 வருடங்களில் 10,473 கத்தோலிக்க பொதுநிலைத் தலைவர்களைப் பயிற்றியுள்ளது.

காலஞ்சென்ற பிதா அமலோற்பவதாஸின் கருத்தில் உருவான இந்நிலையம் தம்மை அர்ப்பணித்த பொதுநிலையினரை உருவாக்குவதற்கு ஒரு விரிவான திட்டத்தைக் கொண்டுள்ளது. கத்தோலிக்க ஆயர் பேரவையினால் நடத்தப்படும் இந்நிலையத்தின் திட்டங்களினால் தொழில் புரிவோர், மாணவர்கள், குடும்பப் பெண்கள் போன்ற பல தரப்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

# குழந்தைகளை படிக்கும்படி வற்புறுத்தாதீர்

''முதலாம் வகுப்புப் பிள்ளைகளை நீண்டநேரம் படிக்கும்படி வற்புறுத்தினால் அது படிப்பிலும் பாடசாலையிலும் அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்கக் கூடும்''

இவ்வாறு பாங்கொக் நகரில் நடைபெற்ற கத்தோலிக்க பாடசாலைகளிலுள்ள கின்டர் கார்டன் வகுப்பு ஆசிரியர்களின் வருடாந்தக் கூட்டத்தில் பேசிய பேராசிரியர் பூண்யவத் கூறினார். வகுப்பறையில் ஆசிரியர்கள் அன்பும் புரிந்துணர்வும் காட்ட வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

கூட்டத்தின் போது சிஸ்டர் திரேசா கிற்றாவி 1990 இன் சிறந்த ஆசிரியையாகத் தெரியப்பட்டார். 83 ஆசிரியர்களுக்கு தாமரை மொட்டு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

# சமூகப்பணியை அறச்செயலாக்காதீர்

''அரசியல் சம்பந்தப்படாத சமூகப்பணி வெறும் தான தருமமுமாகும். ஏழைகள் தான தருமத்தைக் கேட்கவில்லை. ஸ்தாபனரீதியான சமயங்கள் நீண்டகாலமாக எங்களை இவ்வாறு வழிநடத்தி விட்டன. இதன் அடிப்படையை மாற்றவேண்டிய காலம் வந்துவிட்டது.'' இவ்வாறு கொத்தடிமை விடுதலை இயக்கத்தின் தலைவர் சுவாமி அக்னிவேஷ் சமூகநல சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கூட்டத்தில் கூறினார்.

ஏற்கெனவே உள்ள சமூக அமைப்புகளை ஆதரித்துக் கொண்டு சமூகப்பணியில் ஈடுபடுவதில் அர்த்தமில்லை. அரசியலை உலகம் முழுவதும் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துகின்றனர். நாம் சமூகப்பணியில் அதைப் பயன்படுத்தினால் என்ன?'' என அவர் மேலும் கூறினார்.

# புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் தினமும் பெற்றோர் தினவிழாவும்

யாழ். மரியன்னை பேராலயப் பீடப்பணியாளர் சபையின் 107 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பெற்றோர் தின விழாவும் 21-4-91, 22-4-91 ஆம் தினங்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டன.

21-4-91 ஞாயிறு காலை 6.00 மணிக்கு மேற்படி பீடப்பணியாளர் சபையின் முன்னாள் அங்கத்தவரும், புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபருமாகிய, அருள்திரு. P. யேசுநேசன் அடிகளார் பேராலய முன்றலில் சபையின் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பேராலயப் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன் அடிகளார், சபையின் இயக்குநர் அருட்திரு. சி. யே. அன்ரனிபாலா அடிகளாருடன் இவர்களுக்காக பங்குமக்களும் செபிக்கவேண்டும்;'' என்றார்.

மறுநாள், 22.4.91 திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் பெற்றோர் தின விழா ஆரம்பமாகியது. இவ்விழாவிற்கும் அருட்திரு. P. யேசுநேசன் அடிகள் பிரதம விருந்தினராக இருந்தார். முன்னாள் அங்கத்தவரான இவரது வெள்ளிவிழாவினைக் கௌரவிக்கும் விழாவாகவும் இது அமைந்தது. ஆரம்ப நிகழ்வாக பிரதம விருந்தினரால் சபைக் கொடியேற்றமும், மங்கள விளக்கேற்றலும் இடம் பெற்றன.

இறைவணக்கத்தோடு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. தீப நடனத்தை அடுத்து சபையின் தலைவர் செல்வன் சி. பி. பாபுவினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. செய

அங்கு தான் பெற்றுக் கொண்ட அனுபவங்கள், ஆன்மீக வாழ்வு, அழைத்தல் பற்றியும் நினைவு படுத்தி, பழம் பெருமை படைத்த இச் சபை

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

## 2 ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



# இளமை உள்ளம்

1. இளமை உள்ளம் முழுமையாகத் தன்னைப் புரிந்து கொள்ளும் மனித உருவங்களைத் தேடுகிறது.
2. சமுதாயம் தன் கருத்துக்களை மதித்து ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் அறிவுரைகளை விரும்புகிறது.
3. எதிலும் ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு சமுதாய அமைப்பை எதிர்பார்க்கிறது.
4. நீதியான மாற்றங்களையும், திருத்தங்களையும் வரவேற்கிறது.
5. புரியாத சிக்கல்களுக்குத் தெளிவான பதில்களை எதிர்பார்க்கிறது.
6 பேச்சிலும், செயலிலும் ஒன்றுபட்டு வாழும் அனுபவம்

6. 00 மணிக்கு மேற்படி பீடப் பணியாளர் சபையின் முன்னாள் அங்கத்தவரும், புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபருமாகிய, அருள்திரு. P. யேசுநேசன் அடிகளார் பேராலய முன்றலில் சபையின் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பேராலயப் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன் அடிகளார், சபையின் இயக்குநர் அருட்திரு. சி. யே. அன்ரனிபாலா அடிகளாருடன் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினார். விழாநாயகர் அருட்திரு. P. யேசுநேசன் அடிகளார் மறையுரையில், ''மேற்படி சபையானது நூறு ஆண்டுகளைக் கடந்து இறை பணி புரிந்து வருகிறது. இச் சபையின் அங்கத்தவர்கள் பலரும் இல்லற, துறவற அழைப்புக்களை இனிதாகப் பெற்று இறைஆசியோடு வாழ்கிறார்கள். இந்தச் சபையின் ஓர் அங்கத்தவனாக இருந்ததினால் ஆன்ம நலன்களையும், தேவ அழைத்தலையும பெற்றேன். இப்போது இறைவனின் குருவாக வெண் பொன் விழாவையும் கண்டுள்ளேன். இவர்களின் அர்ப்பணம் இறைவனுக்கு உகந்த உன்னத அர்ப்பணம். இவர்களின் வளர்ச்சியினால், உயர்ச்சியினால் திருவழிபாடுகள் ஒழுங்காக நடைபெறுகின்றன.

தம் விருந்தினராக இருந்தார். முன்னாள் அங்கத்தவரான இவரது வெள்ளிவிழாவினைக் கௌரவிக்கும் விழாவாகவும் இது அமைந்தது. ஆரம்ப நிகழ்வாக பிரதம விருந்தினரால் சபைக் கொடியேற்றமும், மங்கள விளக்கேற்றலும் இடம் பெற்றன.

இறைவணக்கத்தோடு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. தீப நடனத்தை அடுத்து சபையின் தலைவர் செல்வன் சி. பி. பாபுவினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. செயலர் செல்வன் ம. இராமசந்திரகுமார் அவர்களால் 106 ஆம், 107ஆம் ஆண்டுகளின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இயக்குநர் அருட்திரு சி. யே. அன்ரனி பாலா அடிகளார் தமது உரையில், சபையின் வளர்ச்சி பற்றி எடுத்துரைத்தார். தமது காலத்தில் தான் கண்ட அனுபவங்களையும் விளக்கினார். பங்குத் தந்தை அருட்திரு எஸ். எச். ஜெபநேசன் அடிகளார் தமது உரையில் பீடப்பணியாளர் பேராலயத்தில் புரியும் அளப்பெரும் பணிகளை எடுத்துரைத்து, நன்றி கூறி, அவர்களது ஆன்மீக வாழ்வு மலர பெற்றோர்களை செபிக்கும்படியும், கண்காணிக்கும் படியும் வேண்டினார்.

பிரதம விருந்தினர் அருட்திரு P. யேசுநேசன் தமது முற்கால சபைவாழ்க்கையையும்

## நினைவாஞ்சலி



செல்வன் நவரெட்னராசா
அன்ரன் பிரிதிவிராயன்
( பியூட்டி )
அன்னையின் மடியில்
**23-03-1976**
ஆண்டவனடியில்
**16-06-1989**

சர்வதயாபர யேசுவே!

சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் என்று உமது சீடர்களுக்கு திருவாய் மலர்ந்தருளுனீரே, எங்கள் செல்லப் பியூட்டி உம்முடைய சம்மனசுகளுடன் உமது திருப்பாதங்களிலே பூசை செய்து பேரின்ப வாழ்வில் என்றென்றும் அக்களிக்கச் செய்தருளும்.

ஆண்டவரே! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இவரது பிரிவால் துயருறும்,
அப்பா. அம்மா, தம்பி,
உற்றார், நண்பர்கள் A/9

# இளமை உள்ளம்

1. இளமை உள்ளம் முழுமையாகத் தன்னைப் புரிந்து கொள்ளும் மனித உருவங்களைத் தேடுகிறது.
2. சமுதாயம் தன் கருத்துக்களை மதித்து ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் அறிவுரைகளை விரும்புகிறது.
3. எதிலும் ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு சமுதாய அமைப்பை எதிர்பார்க்கிறது.
4. நீதியான மாற்றங்களையும், திருத்தங்களையும் வரவேற்கிறது.
5. புரியாத சிக்கல்களுக்குத் தெளிவான பதில்களை எதிர்பார்க்கிறது.
6 பேச்சிலும், செயலிலும் ஒன்றுபட்டு வாழும் அனுபவம் வாய்ந்த பெரியார்களின் வார்த்தைகளை வணங்குகிறது.

---

## 31 ஆம் நாள் நினைவு



திருமதி மரியமுத்து
மார்சலின்பிள்ளை
தோற்றம் அழைப்பு
**31-11- 920 05-05-1991**

''எந்நாட்களோ நிழலைப் போல் சாய்ந்து போயிற்று ஆயினும் என் சகோதரரே நீங்களாயினும் என்னை மறவாதீர்கள்.''

வாழ்வு ஒரு திங்கள் விரைவாக மறைந்ததம்மா
காலமெல்லாம் காத்து கடிதினில் பறந்தாயம்மா
உயிர் ஊட்டும் உதிரமாக வாழ்ந்து மடிந்தாயம்மா
காத்தவனே உமதன்பை கவர்ந்திட்டான் நாம் கலங்க
இறைவனிடம் எம்மவர்க்காய் எப்போதும் வேண்டிடுவாய்.

கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர்
நெடியகாடு, வல்வெட்டித்துறை

பாதுகாவலன்
PATHUKAVALAN

## ரஷ்யாவில் மீண்டும் திருச்சபை

திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் ஏப்ரல் 13-ம் திகதியன்று சோவியத் ரஷ்யாவில் மீண்டும் கத்தோலிக்க திருச்சபையை ஸ்தாபித்தார். ரஷ்யா, பெலோரஷ்யா, கசக்ஸ்தான் ஆகிய இடங்களுக்கு ஆறு புதிய ஆயர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சோவியத்யூனியனுக்கு திருத்தந்தையின் பிரதிநிதியாக இருக்கும் அங்கிலோ கொலாசுவோனோவின் முயற்சியினாலும், சோவியத் நாட்டில் அண்மையில் ஏற்பட்டுள்ள மத சுதந்திரம் காரணமாகவும் மீண்டும் ஆயர்கள் நியமிப்பது சாத்தியமாயிற்று என வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன.

மொஸ்கோ பேராயராக ஆயர் தடேயுஸ் கொண்றுசியூவிக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். சோவியத் ஆட்சி வந்தபின்னர் மொஸ்கோவில் ஆயராக இவரே முதன்முதல் பதவியேற்றுள்ளார். ரஷ்யாவின் ஐரோப்பிய பிரதேசம் முழுவதற்கும் இவரே பொறுப்பாக இருப்பார்.

யாழ் பல்கலைக்கழகம் பிற பல்கலைக் கழகங்களை முந்திவிட்டது.

## கிறிஸ்தவ நாகரீகத்துறை தரமுயர்வு

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ''மொழி, கலாச்சாரவியல் துறை'' எனும் பெருந்துறையின்கீழ், உபதுறையாக இயங்கிவந்த ''கிறிஸ்தவ நாகரீகத்துறை'' யானது, இவ்வாண்டு, சித்திரைத்திங்கள் 22 ஆம் நாள் முதல், இஸ்லாமிய நாகரீகமும் இணைந்த நிலையில் ''தனிப்பெரும் துறையாகப்'' பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் ''கிறிஸ்தவ நாகரீகத்துறையானது'' தனிப்பெருந்துறையாக அங்கீகரிக்கப்பட்டமை, இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் முதற்தடவையாகும்.

1974 இல் உருவான, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமானது, 1979 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறிய காலகட்டத்தில், யாழ். ஆயர் பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. லூதர் ஜெயசிங்கம், முன்னாள் வளாகத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி ஆகியோரின் அரும்முயற்சியினால் முதன் முறையாக ''கிறிஸ்தவ நாகரீகம்'' கலைமானிப் பட்டப் படிப்பின் பொதுப்பாடங்களிலொன்றாக அங்கீகரிக்கப்பட்டதுடன், 1981 ஆம் வருடம், புரட்டாதித்திங்கள், 01 ஆம் நாள் முதல் இதன் முதலாவது நிரந்தர விரிவுரையாளராக அருட்கலாநிதி. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அவர்களைப் பல்கலைக்கழக மூதவை நியமித்தது. இதனைத்தொடர்ந்து ''கிறிஸ்தவ நாகரீகமானது'' 1982 இல் சிறப்புப் பட்டத்திற்குரிய பாடமாகவும் அங்கீகரிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள இப்புதிய துறையின் தலைவராக, அருட்கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அவர்கள் யாழ். பல்கலைக்கழக மூதவையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்கக் குருவானவராகவும், யாழ். பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரீகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் விளங்கும் அருட்கலாநிதி. ஏ. ஜே வி. சந்திரகாந்தன் அவர்கள் கிறிஸ்தவ மெய்யியல், இறையியல் என்பவற்றில் முதுகலைப் பட்டங்களை இந்தியாவிலும், தனது கலாநிதிப் பட்டங்களைக் கனடாவிலும் பெற்றாரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் கனடா மொன்ட்ரியல் கொங்கோர்டியா பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ இயல் விரிவுரையாளராகப்பணியாற்றிய இவர் எழுதிய ஆக்கங்கள் பல சர்வதேச சஞ்சிகைகளில் வெளிவந்தமை யாவரும் அறிந்ததே.

நீசன் ஜெயராஜ்
சிறப்புக்கலை – 3ஆம் வருடம்,
கிறிஸ்தவ நாகரீகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## நியூமன் ஆங்கிலக்கழகத்தின் 3வதுவருடாந்த விழா

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் காடினல் நியூமன் ஆங்கிலக் கழகம் தனது 3 ஆவது வருடாந்த விழாவை மே. 15, 1991 இல் கொண்டாடியது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி திரு. சாம் அன்ரன் செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் தனது உரையில், ''ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்வதற்கு ஆங்கில மொழியில் வாசிப்பதும், பேசுவதும், எழுதுவதும் அவசியமானது. ஆகவே வெட்கத்தை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு உலகமொழியை உங்கள் வசமாக்கிக் கொள்ள உழையுங்கள்'' என்றார்.

கழகத்தின் தலைவரான அருட்சகோதரர் K. சிங்கராயர் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் உரையாற்றிய குருத்துவக் கல்லூரியின் அதிபர் அருட் திரு. S. J. இமானுவேல் அவர்கள் ''ஆங்கிலத்தைக் கற்பது என்பது தமிழைப் புறக்கணிப்பதாகாது. மாறாக தமிழுக்கும், நாட்டுக்கும் சேவை செய்ய அது ஒரு சிறந்த ஊடகமாகும்'' என்றார்.

இந்த இனிய மாலையை அலங்கரித்த பல நிகழ்ச்சிகளுள் குரு மாணவர்களால் மேடையேற்றப்பட்ட ''எமது காலத்திற்கான ஒரு மனிதர்– மாக்சிமில்லியன் கோல்பே'' (A man of our time - St. Maximillian Kolbec.) மற்றும் ''தெருப்புழுதி'' (Dust of the Road") ஆகிய நாடகங்கள் பார்வையாளரைப் பெரிதும் கவர்ந்தன.

விழாவின் இறுதியிலே கழகம் நடாத்திய பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி. மார்தா செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் வழங்கி கௌரவித்தார்.

இவ்விழா வினையொட்டி இடம் பெற்ற போட்டிகளில் பரிசுபெற்றோருக்கு பரிசில்களும் பிரதமவிருந்தினரால் வழங்கப்பட்டன. செல்வன் A. S. நிஷாந்தன் அவர்கட்கு "Star of the Year" இவ்வருடத்துக்குரிய சிறப்பு உறுப்பினர்க்குரிய பரிசில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சபை அங்கத்தவர்களினால் பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

செல்வன் ம. இராசேந்திர குமாரினால் நன்றியுரை வழங்கப்பட்டது. இத்துடன் விழா நிறைவு கண்டது.

மோ. தார்சிசியஸ்

### யாழ். மறைவட்ட வெகுசனதொடர்பு ஆணைக்குழு நடாத்தும்

## வானொலி நாடக கையெழுத்துப்பிரதி போட்டி

கிறிஸ்தவ விழுமியங்களை வெளிப்படுத்தக் கூடிய கருக்களை மையமாகக் கொண்ட வானொலி நாடக கை எழுத்துப் பிரதிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒவ்வொரு நாடகமும் 30 நிமிடங்களுக்கு ஒலிபரப்பக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. பிரசுரமாகியோ, ஒலிபரப்பப்பட்டோ, வேறு நாடகத் தழுவலாகவோ இருத்தல் கூடாது.
3. புல்ஸ்காப்தாள்களின் ஒரு பக்கத்தில் எழுதியதாகவும் சொந்த பெயர் விலாசங்களுடன், தலைவர் வெகுசன தொடர்பு ஆணைக்குழு, சென்பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்

## சமய உட்பிரிவு...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கொலா நாட்டுக் கருதினால் அலெக்சாண்டர், டோநசிமென்டோவின் கூற்றுப்படி ஆபிரிக்க ஆயர்கள் தயாரித்த பட்டியலில் 10,000 த்துக்கு மேற்பட்ட குழுக்கள் அங்கு

## புனித ஞானப்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யானது வரலாறு படைத்த சபையென்றும் கூறி, தற்போதைய அங்கத்தவர்களை புனித ஞானப்பிரகாசியாரின் தூய வாழ்க்கையைக் கண்டு கண்டு பாவிக்கும்படியும் கூறினார்.

## ஒரு புதிய ..............

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணின் இக்கட்டான சூழல் மத்தியிலும் இவர் தம் பொறுப்பை சிறப்புடன் ஆற்ற இதயபூர்வமாக வாழ்த்துகிறோம். இறையருள் வேண்டுகிறோம்.



மானிப்பாய்

## வானொலி நாடக கையெழுத்துப்பிரதி போட்டி

கிறிஸ்தவ விழுமியங்களை வெளிப்படுத்தக் கூடிய கருக்களை மையமாகக் கொண்ட வானொலி நாடக கை எழுத்துப் பிரதிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒவ்வொரு நாடகமும் 30 நிமிடங்களுக்கு ஒலிபரப்பக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. பிரசுரமாகியோ, ஒலிபரப்பப்பட்டோ, வேறு நாடகத் தழுவலாகவோ இருத்தல் கூடாது.
3. புல்ஸ்காப்தாள்களின் ஒரு பக்கத்தில் எழுதிய தாகவும் சொந்த பெயர் விலாசங்களுடன், தலைவர் வெகுசன தொடர்பு ஆணைக்குழு, சென்பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப் பாணம் என்னும் முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.
4. போட்டியில் நடுவர் தீர்ப்பே இறுதியானது போட்டிக்காக அனுப்பப்படும் பிரதிகள் எதுவும் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

போட்டியின் இறுதித் திகதி 30-6-91 தெரிவு செய்யப்படும் 3 பிரதி கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.

"தொடர்புச் சாதனங்களுக்கான எழுத்துப்பட்டறை" ஒன்று ஆனிமாத இறுதியில் நடைபெறவிருப்பதால் அதற்கான விண்ணப்பங்களை பங்குத்தந்தையின் சிபார்சுடன் அனுப்பி வைக்கவும்.

A/8/91

---

### மரண ஞாபக அறிவித்தல்

| திரு. நீ அந்தோனிப்பிள்ளை | திருமதி. அந்தோனியாப்பிள்ளை |
|---|---|
| 8 ஆம் வருடம் | 5 ஆம் வருடம் |
| 19 8-04 04—1983 04-07 | 1918-10-15—1986-06-19 |
| (மலர்வு) (மடிவு) | (மலர்வு) (மடிவு) |

சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் 19.6.91 புதன் மாலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பற்றிமாவாசா
சில்லாலை

நாகசெட்டிகமம்
நானாட்டான்.

A/12/91

---

செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் வழங்கி கௌரவித்தார்.

---

## சமய உட்பிரிவு...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கொலா நாட்டுக் கருதினால் அலெக்சாண்டர், டோ நசிமென்டோவின் கூற்றுப்படி ஆபிரிக்க ஆயர்கள் தயாரித்த பட்டியலில் 10,000 த்துக்கு மேற்பட்ட குழுக்கள் அங்கு உள்ளன. இவற்றின் அங்கத்தவர் தொகை சுமார் 10 மில்லியன். இவற்றுள் அநேகமானவை பாரம்பரிய ஆபிரிக்க சமயங்களுடன் தொடர்புபட்டவை. கறுப்பு ஆபிரிக்காவில் இக்குழுக்களினால் ஏற்பட்டுள்ள சவாலை ஏற்பதற்கு திருச்சபையானது மனித உரிமைகளைச் சீரமைக்கவும், அரசியல் பிரச்சினைகளில் கரிசனை எடுக்கவும், பண்பாட்டு மயமாக்கலைக் கவனிக்கவும் வேண்டும் என அவர் கருத்துத் தெரிவித்தார்.

மட்றிட் நகரக் கருதினால் ஏஞ்சல் சுக்குவியா உளவியல் காரணங்களே அநேக ஐரோப்பியர் இக் குழுக்களை நாடிச் செல்லும்படி செய்கின்றன. சமூகத்தில் துரிதமாக ஏற்பட்டு வரும் பாரிய மாற்றங்கள், மதிப்பீடுபற்றிய நெருக்கடிகள் ஆகியவற்றால் ஏற்படும் பாதுகாப்பின்மை, அச்சம், வேதனை ஆகியவற்றை உதாரணமாக எடுத்துக்காட்டினார்.

---

னார்.

இவ் விழா வினையொட்டி இடம் பெற்ற போட்டிகளில் பரிசுபெற்றோருக்கு பரிசில்களும் பிரதமவிருந்தினரால் வழங்கப்பட்டன. செல்வன் A. S. நிஷாந்தன் அவர்கட்கு "Star of the Year" இவ்வருடத்துக்குரிய சிறப்பு உறுப்பி

---

## ஒரு புதிய ..............

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணின் இக்கட்டான சூழல் மத்தியிலும் இவர் தம் பொறுப்பை சிறப்புடன் ஆற்ற இதயபூர்வமாக வாழ்த்துகிறோம். இறையருள் வேண்டுகிறோம்.

---



## மானிப்பாய்
## புனித அந்தோனியார் ஆலய
## ஆண்டு விழா
### 16-06-1991

07-06-1991 தொடக்கம், தினமும் மாலை 4-15 மணிக்கு செபமாலையுடன் வழிபாடுகள் ஆரம்பமாகும்.
15-06-1991 நற்கருணைத் தினம்.
16-06-1991 புனித அந்தோனியார் தினம்
திருப்பலி காலை 5-45 மணி
திருவிழா திருப்பலி காலை 7-15 மணி.
திருச்சுரூபப்பவனி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலகர்.
புனித அந்தோனியார் ஆலயம்
மானிப்பாய்.

---

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

---

## உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்